1979 மார்ச் 21]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஏற்கனவே நான் சொன்னது போல், இந்தக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இடம் கொடுக்கவேண்டும் என்று சட்டத்தில் இடம் இல்லை. இப்போது மீண்டும் இந்தக் கமிட்டியை ரீகான்ஸ்ட்டியூட் செய்ய வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய செண்டிமென்ட்—உணர்வுகளை அரசு எடுத்துக் கொள்ளும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, இந்த அட்வைசரி கமிட்டியில் நியமிக்கப்படக்கூடிய உறுப்பினர்களின் தகுதியின் அளவுகோல் என்ன? எந்த அடிப்படையில் அது நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9—10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண். 492 (திரு மு. அம்பிகாபதி குறுக்கிடல்) இக் கேள்வி, கோவை சிங்காநல்லூர் பற்றியது. மன்னார்குடி பற்றியது அல்ல.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இது ஜெனரல் பாலிசியைக் பற்றியது. மிகவும் முக்கியமான கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. இது சிங்காநல்லூர் மருத்துவ மனையைப் பற்றியது. இதிலே பாலிசி வராது. நீங்கள் மன்னார்குடி, எனவே, உட்காருங்கள்.

இராஜகம்பீரத்திற்கு குடிநீர் வழங்கல்

*வினா எண். 492—திரு. வ. மு. சுப்பிரமணியன் :—மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி, இராஜகம்பீரத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தால், குடிநீர் திட்டம் ஒன்று நிறைவேற்றுவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஊராட்சியின் நிதிநிலைமை பற்றிய குறிப்பு ஒன்று கேட்கப்பட்டுள்ளது. விவரங்கள் வந்த பிறகு திட்டத்திற்கு அனுமதி அளிப்பதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. வ. மு. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின மொத்த மதிப்பீடு எவ்வளவு? அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய பங்குத் தொகை எவ்வளவு? எவ்வளவு கட்ட வேண்டும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு நீர் வழங்குவதற்கான விரிவான ஆய்வுக்குப் பிறகு ரூ. 2·95 லட்சம் திட்டம் நிறுவுவதற்கும், ரூ. 41,000 ஆண்டு பராமரிப்புக்கும் ஆக ஒரு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் பெற அரசுக்கு, தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த ஊராட்சியில் சென்ற மூன்று வருடங்களுக்கான செலவு, நிலுவை பற்றிய விவரமும், வரி விரிவாக்கம் பற்றிய விவரங்களும் கோரப்பட்டுள்ளது. அவைகள் இன்னமும் வரவில்லை. வந்த பிறகு திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பதுபற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. வ. மு. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிக்கு குறைந்த வருமானம் வருகின்ற காரணத்தினால் அதற்கான பங்குத் தொகை கட்டுவதற்கு கஷ்டப்படலாம். அப்படி இருந்தால், இந்தத் திட்டத்தை அங்கே செயல்படுத்துவதற்கு இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் இந்த அரசு பரிசீலிக்கும் என்று சொன்னேன். ரி பேயிங் கபாசிடி இருக்குமா அதாவது

1979 மார்ச் 21]

மீண்டும் திருப்பிச் செலுத்துவதற்கு சக்தி அதற்கு உண்டா என்பதையும், எந்தெந்த டாக்ஸ் போடுவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும், எந்தெந்த வகைகளிலே வருவாயை அதிகப்படுத்த முடியும் என்பதற்கான வழிவகைகள் இருக்கின்றது என்கின்ற விவரங்களை எல்லாம் இந்த அரசு பரிசீலிக்கும்.

வரதமாநதி அணைக்கட்டு.

*வினா எண். 493—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பழனி பகுதியில் உள்ள வரதமாநதி அணை மிகவும் குறுகிய அளவில் இருப்பதால் அங்கு மழை காலத்தில் வரும் தண்ணீர் முழுவதும் தேக்கிவைக்க முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த அணையிலிருந்து இரண்டு கி. மீ. மேலே தள்ளி இன்னும் ஒரு தேக்கம் கட்டும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) வரதமாநதி அணைக்கட்டின்கீழ் உள்ள குளங்கள் அனைத்தும் நிரம்பிய பிறகே அணையில் நீர்த்தேக்கப்படுவதால், இந்த அணையின் கொள்ளளவு போதுமானதாகவே உள்ளது.

(ஆ) இல்லை.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கட்டப்பட்டுள்ள அணையில், கீழே இருக்கக்கூடிய எல்லா கண்மாய்களிலும் போதுமான தண்ணீர் இருக்கின்றது. அதைப்பற்றிச் சொல்லவில்லை. அங்கே வரக்கூடிய வரத்து ஒரு சில மணி நேரங்களிலேயே அந்த அணை நிரம்பி விடுகின்றது. ஆகவே, மற்ற நேரங்களில் தண்ணீர் கீழே அனாவசியமாகப் போகிறது. ஆகவே, இந்த அணையிலிருந்து மேலே ஒரு கிலோ மீட்டர் அல்லது இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பெரிய அணையைக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை அந்தப் பகுதி மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக தேனியில் நடைபெற்ற நீர்ப்பாசனக் கருத்தரங்கில் வலியுறுத்தப் பட்டது. எனவே, இந்த அணையைப்பற்றிப் பரிசீலித்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.